## தொகுதி 3 – வரவுசெலவுத் திட்டமிடல் (பட்ஜெட்டிங்) செயற்பாட்டுத் தாள் 3-6 உங்கள் சொந்த வரவுசெலவுத் திட்டத்தை உருவாக்குதல்

**படி 1 – தயாராகுதல்.** தேவையான எல்லா பத்திரங்களையும் சேர்க்கவும்.
இவை உட்படுத்துபவை:

- சம்பள அடித்தாள்கள் (பே ஸ்டப்ஸ்)
- அரசாங்க காசோலைகளின் அடித்தாள்கள் அல்லது டிரெக்ட் டெப்பொசிட் நோட்டிஸ்கள்
- ரசீதுகள்
- கட்டணச் சீட்டுகள் (பில்)
- வங்கி மற்றும் கிரெடிட் கார்ட் ஸ்டேட்மன்ட்கள்
- கடன் பத்திரங்கள்.

**படி 2 – வருமானம்.** ஒரு மாதத்தில் வரும் வருமானத்தின் மூலங்களைப் பட்டியலிடுங்கள். ஒவ்வொரு மூலத்திலிருந்தும் நீங்கள் எவ்வளவு பெற்றுக்கொள்கிறீர்கள் என்பதை எழுதுங்கள். அவற்றைக் கூட்டுங்கள். இதுதான் உங்கள் மாதாந்த மொத்த வருமானம்.

**படி 3 – செலவுகள்.** உங்கள் அனைத்து செலவு வகைகளையும் பட்டியலிடுங்கள். மாற்ற முடியாத செலவுகளை முதலில் எழுதுங்கள். இவைதான் உங்கள் கட்டணச்சீட்டுகளில் இடம்பெறக்கூடியவை அல்லது ஒவ்வொரு மாதமும் மாறாமல் இருப்பவை. அடுத்ததாக, ஒவ்வொரு மாதமும் மாறக்கூடிய செலவு வகைகளை உங்களால் முடிந்த அளவு சரியாக மதிப்பிடுங்கள்.
**சீசனல் (பருவகால) செலவுகள்** வருடாந்த இன்சூரன்ஸ் செலவு, பிள்ளைகளுக்கான பாடசாலை உடைகள், அல்லது விடுமுறை காலப் பரிசுகள் வாங்குதல் ஆகியவற்றை உட்படுத்தும். மாதாந்த சராசரித் தொகையைப் பெற, வருடாந்த மொத்த செலவை 12 ஆல் பிரியுங்கள். அதை உங்கள் வரவுசெலவுத் திட்டத்தில் ஒரு மாறாத மாதாந்த செலவாக சேர்த்துக்கொள்ளுங்கள்.
**உதாரணம்:** ஒவ்வொரு வருடமும் கார் இன்சூரன்ஸிற்கு 800 டொலர் கட்டணச் சீட்டைப் பெறுகிறீர்கள். 800 டொலரை 12 ஆல் பிரியுங்கள். விடை66.67 டொலர்கள். இதுதான் கார் இன்சூரன்ஸிற்கான உங்கள் மாறாத மாதாந்த செல்வு.
**முதலில் உங்களைக் கவனியுங்கள்:** ஒரு இலக்கிற்காக நீங்கள் சேமிக்க விரும்பினால், எத்தனை மாத காலமாக சேமிக்க விரும்புகிறீர்களோ அந்த இலக்கத்தால், இலக்கிற்கான மொத்த விலையை பிரியுங்கள். அதை உங்கள் வரவுசெலவுத் திட்டத்தில் ஒரு மாறாத மாதாந்த செலவாக சேர்த்துக்கொள்ளுங்கள்.
உதாரணம்: இன்னும் ஒன்றரை வருடத்தில், நீங்கள் ஒரு புதிய கம்பியூட்டரை வாங்க திட்டமிடுகிறீர்கள். அதன் விலை1000 டொலர்கள். 1000 டொலரை 18 மாதங்களால் பிரியுங்கள். 55.56 டொலர்களை நீங்கள் பெறுவீர்கள். அது உங்கள் இலக்குக்கான மாறாத மாதாந்த சேமிப்புச் செலவாகும்.
**சேமிப்புக் குறிப்பு:** சீசனல் செலவுகள் மற்றும் சேமிப்பு இலக்குகளுக்கான தொகையை செலவு அக்கவுன்டிலிருந்து தனிப்பட்ட அக்கவுன்டுக்கு நீங்கள் மாற்றலாம். இதை நீங்கள் ஒவ்வொரு மாதமும் செய்துவந்தால், பணம் பெருகிக்கொண்டு செல்லும். உங்களுக்குத் தேவையானபோது அதைச் செலவுசெய்யலாம்.

**படி 4 – கணக்கைச் செய்யவும்**

உங்கள் மொத்த மாதாந்த செலவுகளை ஒன்றாகக் கூட்டுங்கள். இந்தத் தொகையை உங்கள் மொத்த மாதாந்த வருமானத்திலிருந்து கழியுங்கள். உங்களிடம் பணம் மீதியாக இருக்கின்றதா? அல்லது உங்கள் சம்பாத்தியத்திற்கும் அதிகமாக நீங்கள் செலவுசெய்கிறீர்களா?

**படி5 – உங்கள் வரவுசெலவு திட்டத்தை திருத்தியமையுங்கள்**

உங்கள் செலவுகள் உங்கள் சம்பாத்தியத்தைவிட அதிகமாக இருந்தால், நேர்மையாகவும் யதார்த்தமாகவும் சிந்தியுங்கள். உங்கள் எந்த செலவுகளை குறைக்கலாம்? எந்த வருமானத்தைக் கூட்டலாம்? உங்கள் சேமிப்பு இலக்குகளை நீங்கள் மாற்றவேண்டுமா?